சேய்தி வெ.எண்:24 நாள்.்.17.01.2016

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை

இராமநாதபுரம் மாவட்டம்

போலியோ சொட்டு மருந்து முகாம்

17.01.2016 மற்றும் 21.02.2016

தேசிய அளவில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ நோய் தடுக்கும் வகையில் நாடுதழுவிய போலியோ சொட்டு மருந்து முகாம் 17.01.2016 மற்றும் 21.02.2016 ஆகிய தேதிகளில் நடத்தப்படவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட 122588 குழந்தைகளுக்கு 1212 மையங்களில் நடத்தப்படவுள்ளது. மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், மற்றும் கிராமங்களில் உள்ள பொது இடங்களில் இம்முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

சுகாதாரபணியாளர்களை, அங்கன்வாடி பணியார்கள், ஆசியரியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் உட்பட 4848 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்

புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், கோவில் திருவிழாக்கள், போன்ற மக்கள் கூடும் இடங்களில் நடமாடும் போலியோ மையங்கள் அமைக்கப்பட்டு போலியோசொட்டுமருந்து கொடுக்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் தங்கள் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குபோலியோ சொட்டுமருந்து கொடுத்து போலியோநோய் இல்லா உலகத்தை ஏற்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியூடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் இராமநாதபுரம்